
# மகுடம்

# MAKUDAM

MAKUDAM
That they all may be one

இதழ் : 16 makudam2007@yahoo.com ஆடி : 01.07.2008

## பல்சுவை மாத இதழ்



இலங்கையில் பழங்குடியினர்

Rev. Fr. S. J. Emmanuel? ...
Director
AHAVOLI
Family Services Centre
St. Patrick's Road, Jaffna, Sri Lanka.

NAVALY Y.M.C.A ESTD. - 1891

வெளியீடு:

நவாலி Y.M.C.A

விலை = 20/-

## ஆசிரியரின் பேனாவிலிருந்து...

**அன்பு வாசக நெஞ்சங்களே!**

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், மகுடம் அதே பொலிவுடனும், அதே விலையுடனும் வெளிவருகின்றான் என்பதில் மகிழ்வடைகின்றோம். பல்வேறு நெருக்கடிகள் இருந்தமையால் மகுடம் சற்றுத் தாமதமாக உங்கள் கரங்களை வந்தடைந்துள்ளான். ஏற்றுக் கொள்ளுவீர்கள் என நம்புகிறோம்.

இன்று சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் விரைவாக நடைபெறுகின்றன. விலைவாசி உயர்வு, வேலையின்மை, பாதுகாப்புப் பிரச்சினை, இடப்பெயர்வு, அகதி வாழ்வு போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் நாடு முழுவதுமே காணப்படுகின்றன.

இவற்றுக்கு மத்தியிலும் மக்கள் வாழப்பழகிக் கொண்டுள்ளனர். சீமெந்தின் உச்ச விலை அனைத்துக் கட்டுமானப் பணிகளையும் முடக்கி வைத்திருக்கின்றது. இதனால் அதனுடன் இணைந்த அனைத்துப் பணிகளும் முடக்கப்பட்டுள்ளன. பலர் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர். இதனால் களவு, சுரண்டல், வழிப்பறிக்கொள்ளை அதிகரித்துள்ளன. இவற்றின் மத்தியில் சமூகத்தை மேம்படுத்தி சீர்கேடுகளைக் களையும் நோக்குடன் பல இனிய செய்திகளைத் தாங்கி மகுடம் வெளிவருகின்றான். வாசித்துப் பயனடைவீர்.

*நாம் வளர மகுடம் வளர்வான்;*
*மகுடம் வளர நாமும் வளர்வோம்.*

-ஆசிரியர்-


## மகுடம்

இதழாசிரியர் :- வண.A.S.T.ஆனந்தன்
துணை ஆசிரியர் :- M. மதுராஜ்
இணை ஆசிரியர் :- A. பியூலா
ஆசிரிய ஆலோசகர்:-
திரு. நவாலியூர் நடேசன்
வண. S. ஜோன் லிங்கேஸ்வரன்
திரு. N. சத்தியவேந்தன்

பிரதிகள் :- 500
நூலின் வகை :- பல்சுவை இதழ்
வெளியிடு :- நவாலி Y.M.C.A
பக்கங்கள் :- 24
விலை :- 20/=
பதிப்பு :- ரூபன் பிறிண்டேர்ஸ்.


## வாசகர் கவனத்திற்கு...

மகுடம் இதழ்களில் இதழ் 7,8, 12, 13 என்பவை மாத்திரம் குறைந்தளவு கையிருப்பில் உள்ளன. தேவைப்படுவோர் நேரிலோ, முகவர்கள் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம். தபாலில் பெற விரும்புபவர்கள் ரூபா 5.00 பெறுமதியான ஐந்து முத்திரைகளை தபால் உறைக்குள் வைத்து, தெளிவான தங்களுடைய சுய பெயர், முகவரியுடன் மகுடம் சஞ்சிகைக்கு அனுப்பி மேற்படி இதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- ஆசிரியர் -


உங்கள் ஆக்கங்கள், விமர்சனங்கள், கடிதங்கள், விளம்பரங்கள், வாழ்த்துக்கள் போன்ற சகல தொடர்புகளுக்கும்,

ஆசிரியர்.
மகுடம் சஞ்சிகை
நவாலி Y.M.C.A, நவாலி
மானிப்பாய்.
T.P : 0774651244
E mail:- makudam2007@yahoo.com

# வாழ்வில் மகிழ்ந்திருக்க.......



கண்தெரியாத வாலிபப்பெண் ஒருத்தி இருந்தாள். கண்தெரியாது என்பதனால் இவள் தன்னையே வெறுத்ததுமல்லாமல், மற்றவர்களையும், வெறுத்தாள். ஆனால் இவள் அதிகமதிகமாக நேசிக்கும் ஒரு வாலிபனை மட்டும் வெறுக்கவில்லை. இவன் இவளுக்காக எதையும் செய்யக் காத்திருந்தான். அதேபோல இந்தப் பெண்ணும் தான் கண்பார்வை பெற்று இவ்வுலகைப் பார்க்க முடிந்தால் முதலாவதாக இந்த வாலிபனைத் திருமணம் முடிப்பதாக உறுதியளித்திருந்தாள்.

ஒருநாள் யாரோ ஒருவர் தனது இருகண்களையும் இந்தக் கண்தெரியாத பெண்ணுக்குத் தானம் செய்ய முன்வந்தார். இரண்டு கண்களும் இப்பெண்ணுக்குப் பொருத்தப்பட்டு கண்பார்வை பெற்றாள். தற்போது இவளுக்கு எல்லாவற்றையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. தான் நேசிக்கும் அந்த வாலிபனையும் பார்க்கக்கூடியதாக இருந்தது. அப்பொழுது அந்த வாலிபன் தன்னையே நேசிக்கும் அந்தப் பெண்ணிடம் கேட்டான், "இப்போது என்னைத் திருமணம் செய்து கொள்ள முடியும்தானே?" என்று. ஆனால் அந்தப் பெண்ணோ அந்த வாலிபனைப் பார்த்துத் திடுக்குற்றாள். ஏனெனில் அவனோ இப்போ குருடனாக இருந்தான். அதனால் திருமணம் செய்ய அவள் மறுத்துவிட்டாள்.

அந்த வாலிபன் கண்ணீரோடு ஒரு கடிதத்தை மட்டும் எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டான். அந்தக் கடிதம் சொல்லிற்று இப்படி: "அன்பே என் கண்களையாவது கவனமாக வைத்துக்கொள்" என்று. நாமும் இப்படித்தான். அடிக்கடி நிலை தடுமாறும்போது எம் சிந்தனைகளை மாற்றிக் கொள்கிறோம். அல்லது ஏமாற்றிவிடுகிறோம் அல்லவா. ஒரு சிலரே கடந்த காலங்களை நினைவு கூருகின்றார்கள்.



நீங்கள் ஒருவருக்கு எதிராக கடினமான வார்த்தையைப் பேசமுன் ஒன்றும் பேசமுடியாத ஒரு ஊமையை எண்ணிப் பாருங்கள். உணவு ருசி இல்லையென்று குறைகூறுமுன், உண்ண உணவற்றவர்களை எண்ணிப் பாருங்கள். உங்கள் கணவன் அல்லது மனைவியைக் குறைகூறுமுன் ஒரு துணைக்காகக் கதறும் ஒருவரை எண்ணிப் பாருங்கள்.

உங்கள் வாழ்வைக் குறித்துக்கவலைப்படும் நீங்கள் ஏற்கனவே மரித்துப்போனவர்களை எண்ணிப்பாருங்கள். உங்கள் குழந்தைகளைக் குறை கூறுமுன்னர் குழந்தை இல்லையே என்று ஏங்குபவர்களை எண்ணிப்பாருங்கள். உங்கள் வீடுவசதி போதாது என முறுமுறுக்கும் நீங்கள் வீதிகளிலும், அகதி முகாம்களிலும் வாழ்கின்றவர்களை எண்ணிப்பாருங்கள்.

உங்கள் தொழிலைக் குறித்துக் குறைவுபடும் நீங்கள் தொழில் அற்றவர்களை எண்ணிப்பாருங்கள். வாழ்க்கையிலே மனமகிழ்வோடு இருக்கவேண்டுமென்றால் குறைவுகளையே எண்ணிக்கொண்டிருக்காமல் உங்கள் வாழ்வில் காணப்படும் நிறைவுகளை நினைத்துப் பாருங்கள். இது கடவுள் தந்த நாள் என்ற மகிழ்வோடு ஒவ்வொரு நாட்களையும் அர்த்தமுள்ளதாக செலவுசெய்யப் பழகிக்கொள்ளுங்கள். அப்போது உங்கள் வாழ்வு நிறை வாழ்வாக அமைந்திருக்கும்.

நன்றி. சந்திய வந்தனம்



# வாய்மொழியற்ற தொடர்பாடலின் ஊடாக உணர்வுகளை புரிந்துகொள்வோம்

## SENSES

த. சிறிகமலநாதன், அகவொளி குடும்ப வளத்துணை நிலையம், யாழ்ப்பாணம்

மனிதர்கள் தங்களது உணர்ச்சிகளை வார்த்தைகளால் மட்டுமன்றி வாய்மொழியற்ற உடல் மொழிகளாலும் வெளிப்படுத்துவர். இவ்வாறு உடல் மொழிகளால் வெளிப்படுத்தப்படும் உணர்ச்சிகள் அவர்களது உண்மையான மன உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

உளவளத்துணையாளர்களை பொறுத்தமட்டில் துணைநாடுநரின் எண்ணங்களையும் எதிர்பார்ப்புகளையும் மட்டுமன்றி நிறைவேற்றப்படாத தேவைகளையும் இத்தகைய உடல்மொழிகள் காட்டிநிற்கும். அத்துடன் உடல் மொழிகளுடன் வாய்மொழித் தொடர்பாடல் கொண்டிருக்கும் ஒத்த தன்மையையும், வேறுபட்ட தன்மையையும் கூட அடையாளம்கண்டு துணைநாடுநருக்கு உதவி செய்வதற்கு பயன்படுத்த முடியும்.

மேற்குநாடுகளைப் பொறுத்தவரையில் கோபம், சோகம், பயம், மகிழ்ச்சி போன்ற சில உணர்வுகளையே பிரதானமாக அடையாளம் கண்டுள்ளனர். ஆனால் எமது தமிழ் பண்பாட்டில் உணர்வுகள் ஒன்பதாக வகைப்படுத்தப்பட்டு அவை நவரசம் என அழைக்கப்படுகின்றன. அவையாவன...





சிருங்காரம் – அன்பு
அற்புதம் – ஆச்சரியம்
வீரம் – வீரம்
வாம்யம் – சிரிப்பு
பீட்சம் – வெறுப்பு
ரொத்திரம் – கோபம்
கருணா – சோகம்
பயாணகம் – பயம்
சாந்தம் – அமைதி

இத்தகைய ஒன்பது உணர்வுகள் பிரதானமாக கொள்ளப்பட்டாலும் இவற்றைவிட நூற்றுக்கணக்கான உணர்வுகளை மனிதர்கள் தமது உடல்மொழிகளுடாக வெளிப்படுத்துகின்றனர். அதாவது ஒவ்வோர் உணர்ச்சியும் அவை உணரப்படுகின்ற ஆழம் அல்லது வேகத்திற்கேற்ப பல்வேறு உணர்ச்சிகளாகப் பிரசவமாகின்றன.

உதாரணமாக:– கோபம் என்ற உணர்வு வேகமாகின்றபோது சினம் என்றும் அதுவே இன்னும் சற்று வேகமாக செல்கின்ற போது பழிவாங்கல், ஆக்ரோசம், வன்மம்... என்றும் பல்வேறு பரிணாமங்களை பெறுகின்றது. சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் உணர்வுகள் தோற்றம் பெறுகின்றன. உதாரணமாக:
– அன்பு என்கின்ற உணர்வு பல்வேறு பரிணாமங்களை பெறுவதினை அவதானிக்கலாம்.

வைத்தியருக்கு நோயாளி மீது – அக்கறை
நண்பர்கள் இருவரிடையே – நட்பு
ஆசிரியர் மாணவரிடையே – குருபக்தி
தாய்க்கு பிள்ளை மீது – பாசம்
காதலன் காதலியிடையே – காதல்
மனிதன் இறைவனிடையே – இறைபக்தி

என்று அன்பின் பரிணாமத்தை கூறிக்கொண்டே செல்லலாம்.

### உணர்வுக்கலவை

ஒருவர், ஒரு வினாடியில் தனக்கு ஏற்படுகின்ற உணர்வில் இருந்து விடுபட முன்னர் இன்னுமொரு உணர்வு குறுக்கீடு செய்யலாம். அத்தகைய நிலமையினை உணர்வுக்கலவை என்கின்றோம். உதாரணமாக:– வெற்றிக்களிப்பில் இருந்த நபர் ஒருவர் துக்ககரமான செய்தி ஒன்றைக் கேள்விப்படுகின்ற போது அவருக்கு வருகின்ற சிரிப்பும், அழுகையும் கலந்த புதிய உணர்வுக்கலவை உருவாகின்றது.

*மனிதர்களின் உணர்வுகளையும் உணர்ச்சி மாற்றங்களையும் அடையாளப்படுத்தும் ஊடகங்கள்*



1) முகபாவனை – முகம் சிவத்தல், முகம்சுழித்தல், முகம் கறுத்தல், முகம் இறுகுதல்
2) கண் தொடர்பு – வெறித்தபார்வை, உற்றுப்பார்த்தல், கண்கலங்கல், கண்ணீர் விடுதல் கண்மூடுதல், கண்மடல் விரிதல், கண்கசக்கல்.
3) வியர்த்தல் – மயிர்சிலிர்த்தல், உடல் வறழுதல்

4) உடற் செயற்பாடுகள் – உடல்அசைத்தல், கைபிசைதல், காலால் வருடுதல், உடலை இறுக்குதல்

5) இருக்கை நிலைகள் – முன்சாய்ந்திருத்தல், பின்சாய்ந்திருத்தல், இருக்க அந்தரப்படுதல், ஓரமாக இருத்தல்.

6) மூச்சுவிடுதல் – வேகமாக மூச்சுவிடல், ஆழமற்ற மூச்சுவிடல், மூச்சு திணறுதல், பெருமூச்சு விடல், மௌனமாக இருத்தல், குரல் மாறுதல், குரல் தடித்தல், நடுங்குதல் என்பனவாகும்.

மேலே கூறப்பட்ட உடல்மொழிச்செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் துணைநாடி வெளிப்படுத்துகின்ற போது உளவளத்துணையாளர் மிகவும் கவனமாகவும், நுட்பமாகவும், பொறுப்புணர்வுடனும் அவதானிப்பதன் மூலம் துணைநாடுநரின் மனதின் போக்கினையும் எதிர்பார்ப்பினையும் அவரது உண்மையான பிரச்சினைகளையும் புரிந்துகொள்ள முடியும்.

எவ்வாறு இருப்பினும் உடல்மொழிகளை அவதானித்து மனித மனங்களைப் புரிந்துகொள்வது தொடர்பாக மிகவும் அவதானமாக இருப்பதுடன், கலாசாரம், பிரதேசவழமைகள், சூழ்நிலைகள் என்பனவற்றையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். முகத்தைப் பார்த்து அகத்தை அறிதல் என்பது மிகவும் மதிநுட்பமான கலை. இதற்கு நிறைந்த அறிவு, நீண்ட அனுபவம், நுட்பமான அவதானிப்பு, அர்ப்பணமான மனஉணர்வு என்பன அவசியமாகும். கீழ்வரும் உடல் மொழிகள் கூறும் உணர்வுகளை கண்டுகொள்வோம்.

*1. சிருங்காரம் – அன்பு* ☞ நாம் ஒருவர் மீது வைத்திருக்கின்ற பாசம், அன்பு, காதல், பக்தி, சிரிப்பு, இம்சை, வெட்கம், செல்லம், அரவணைப்பு

*2. கருணா – இரக்கம்.* ☞ ஒருவர் துக்கத்தில் இருக்கும்போது அங்கு சோகம் உண்டாகின்றது. அந்த உணர்ச்சி முகத்தில் பிரதிபலிக்கும். அது சோகமாகும். துக்கம், கருணை, பரிதாபம், சோகம், மனச்சோர்வு, உடற்சோர்வு, கவலை, சஞ்சலம் , நிலையற்ற மனம், ஸ்தம்பிதம், வலி, அனுதாபம், தளர்ச்சி, கலக்கம்.

*3. ஹாஸ்யம் – சிரிப்பு* ☞ ஒரு இயற்கையான நிகழ்வு ஒரு பரிமாற்று ஊடகமாகவும் இருக்கும். ஒரு நிகழ்வைப் பார்த்தோ, ஒருவரைப் பார்த்தோ நிகழும் ஒரு உணர்ச்சிக் கலகலப்பு, மகிழ்ச்சி, குதூகலம், அட்டகாசம், உற்சாகம், சந்தோசம் ஆகும்.

*4. ரௌத்திரம்* ☞ ஒருவர் மேல் அளவுகடந்து வைக்கும் நம்பிக்கை, அன்பு என்பவற்றை உதாசினப்படுத்தும் போது ஏமாற்றத்தை தாங்கமுடியாத நிலையில் இவ்வுணர்வு வெளிப்படும். கோபம் வரும்போது மனிதன் மனிதனாக இருக்க மாட்டான். கொந்தளிப்பு, ஆக்ரோசம், அதீத ஆத்திரம் பிடிவாதம் நிறம் மாறுதல் என்பன வெளிப்படும்.

*5. வீரம்* ☞ ஒருவர் தன்னுடைய பலத்தை ஆற்றலை வெளிப்படுத்தும் போது அதை வீரம் என்கின்றனர். உறுதி, உற்சாகம், ஆக்ரோசம், கொடூரம் என்பன வீரத்துடன் சேர்ந்தவை.

*6. பயாணகம்* ☞ ஒரு செயலுக்கோ, ஒருவருக்கோ அடிபணிந்து நடுங்கி ஒடுங்குதல் ஆகும். நடுங்குதல், மரியாதை, கீழ்ப்படிவு, அடக்குமுறை, ஒதுங்குதல் அடங்குதல் என்பன இவற்றுடனிணைந்தவை.

*7. பீபட்சம்* ☞ ஒரு அருவருப்பான விசயத்தை பார்க்கும் போது /ஒரு அருவருப்பான பொருளையோ செயலையோ பார்க்கும் போது முகத்தில் இவ்வுணர்ச்சி ஏற்படுகின்றது. அருவருப்பு, வெறுப்பு.

*8. அற்புதம்* ☞ ஒரு செயலை நாம் பார்க்கும்போது "ஆ இப்படியா?" என்று வியக்கின்றோம். "ஐயோ பாம்பு" என்று ஆச்சரியப்படுகின்றோம். விழிப்பு, ஆச்சரியம், வியப்பு.

*9. சாந்தம்* ☞ இது ஒரு சொரூபமான நிலை. அதாவது ஐம்புலன்களையும் ஓர் அமைதியான நிலையில் வைத்திருத்தல். இனிமை, நினைவு, திருப்தி, மனநிறைவு, நித்திரை, இதம் வருடல் சாந்தி.

# பொது அறிவு

## உலகில் மிகப் பெரியவை

1. மிகப் பெரிய தீவு? கிறீன்லாந்து
2. சனத்தொகை கூடிய நகரம்?
   டோக்கியோ



3. மிகப் பெரிய கடல்?
   தென் சீனக்கடல்
4. மிகப்பெரிய நூதனசாலை?
   மியூசியம் ஒப் நெஞ்சுரல் ஹிஸ்ரி (நியூயோர்க்)



5. மிக நீளமான வீதி?
   பிண் அமெரிக்கன் வீதி
6. மிகப்பெரிய துறைமுகம்? டோடர்டாம் - ஈரோம் போர்ட் (நெதர்லாந்து)
7. மிகப் பெரிய நூலகம்?
   அமெரிக்கன் காங்கிரஸ் நூலகம்




8. மிக உயரமான கோபுரம்?
   சி என் டவர் (கனடா)
9. அதியுர் வெப்பமான இடம்?
   அஸ் ஸியா (லிபியா)
10. மிகப் பெரிய குளிர்ச்சியான பகுதி?
   அண்டார்டிகா

**J. Mathuri**
**J/ Victoria College, Chulipuram.**

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## பொது அறிவுகள்



1. இதயத் துடிப்பை தூண்டும் இதயத்தின் மையம் - **ஸ்பேஸ்மேக்கர்**
2. இதயத் துடிப்பை குறைக்கும் இரசாயன பொருள் - **அசட்டைஸ் கொலைன்**
3. இரத்த அழுத்தத்தை கணிக்க பயன்படும் கருவி - **ஸ்பிக் மனோ மீற்றர்**
4. சீனியிலுள்ள கனிப்பொருட்கள் **காபன், ஒட்சிசன், ஐதரசன்**
5. உடலில் மிகவும் சிறிய எலும்பு - **காது எலும்பு**

**B. Priyanka, Grade - 10**
**Manipay Ladies College.**

## உங்களுக்குத் தெரியுமா?



தென்னாபிரிக்காவில் உள்ள ஒரு வகைத் தவளைகள் எப்போதும் நீரிலேயே இருக்கும். இத்தவளைகளின் பின்னங் கால்களில் நகங்கள் உள்ளன. இவற்றின் உதவியால் இத்தவளைகள் தம் உணவைப் பிடித்து உண்கின்றன.

**Beurina Josephin. S, A/L 2009**
**Chundikuli Girls' College**

## ஐக்கிய நாடுகள் சபை

ஐக்கிய நாடுகள் சபை 1945ம் ஆண்டு அக்டோபர் 24ம் திகதி அன்று ஆரம்பிக்கப் பட்டது. 2ம் உலகப் போரின் பின்னர் நாடுகளுக்கிடையே சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்காக சில நாடுகள் சேர்ந்து இச்சபையை உருவாக்கின.

வறிய நாடுகளுக்கு உதவுதல், பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துவைத்தல், கடன் உதவிகளை வழங்குதல் போன்றன இச் சபையின் செயற்பாடுகளாகும். இதன் தலைமைக் காரியாலயம் நியுயோர்க்கில் அமைந்துள்ளது. இச்சபையில் 192 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்சியா, சீனா என்பன முழு அதிகாரம் பெற்ற நிரந்தர அங்கத்துவ நாடுகளாக உள்ளன..

இச்சபையின் சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்தில் உள்ள வேறாக் நகரில் அமைந் துள்ளது. இங்கு 15 நீதியரசர்கள் உள்ளனர். ஐ.நாடுகள் சபையுடன் இணைந்துள்ள பிரதான ஸ்தாபனங்களாக, ஐ.நா.கல்விவிஞ்ஞான, கலாசார ஸ்தாபனம், உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச வங்கி, சர்வதேச தொழில் ஸ்தாபனம். சர்வதேச அணுசக்தி ஸ்தாபனம் என்பனவாகும்.

ஐ.நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனத்தின் தலைமைக்காரியாலயம் பிரான்சில் உள்ள பாரிஸ் நகரில் அமைந்துள்ளது. இவ்வாறு ஐ.நாடு சபையானது தனது சேவைகளை பொது நலத்துடன் மக்களுக்காக ஆற்றுகின்றது. இவ் வமைப்பு தோன்றியதன் பயனாக உலகின் போர் நடவடிக்கைகளும், பொருட்சேதங்களும், உயிர்ச்சேதங்களும் குறைக்கப்பட்டு நாடுகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

ஸ. நிதர்சனா, J/ நவாலி ம.வி.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# பெண்



## மனைவி

01. கணவனுக்கு மனைவி அணிகலன்: சேய் தாய்க்கு உயிர். - வி. ஸ. காண்டேகர்

02. தாய் மறைந்தால் நாச்சுவை போகும். தந்தை இறந்தால் கல்வி போகும். மனைவியை இழந்தாலோ இவைகள் அனைத்துமே போய்விடும். - நீதி வெண்பா

03. வெற்றிகரமான மனைவி அனைத்து முடிவு களையும் தானே எடுத்தாலும் அதன் முடிவு களைத் தன் கணவனே எடுத்ததாக அவனை நம்ப வைப்பாள். - ஆங்கிலப் பழமொழி

04. கண்ணுக்கு இனியவளாய், தன் கணவன் விரும்புமாறு அழகு செய்து கொள்பவளாய், பிறர் அஞ்சும் கற்புள்ளவளாய், பிற மகளிரும் போற்றும் பெருமை உடையவளாய், அனைவருடனும் இன்மொழி பேசும் இயல்புடையவளாய் வாழும் பெண்ணே மனைவி எனப்படுவாள். - நாலடியார்

05. மனைவி என்பவள் கணவனுக்கு அவனுடைய இளமைப்பருவத்தில் காமக்கிழத்தி, நடுத்தர வயதில் உற்ற தோழி, முதுமையில் செவிலித் தாய். - பிரான்சிஸ் பேகன்

06. மனைவிதான் குடும்பம், வீடு எல்லாம். பூமி நமக்குத் தாய். - ரிக் வேதம்

07. ஒரு மனிதன் எந்தப் பெண்ணுடனும் இன்பமாக இருக்க முடியும், அவளைக் காதலிக்காதவரை. - ஆஸ்கார் வைல்டு

08. ஒரு தொல்பொருளியலாளர்தான் ஒரு பெண்ணு க்குச் சிறந்த கணவன். - அகதா கிறிஸ்டி

09. ஒரு நல்ல மனைவியும், உடல் நலமும் ஒரு மனிதனின் சிறந்த செல்வம் - தாமஸ் புல்லர்

10. இங்கே என் மனைவி கிடக்கிறாள், அவள் இருக்கட்டும். அவள் ஓய்வு பெற்றுள்ளாள், நானும் அப்படியே. - ஜான் டிரைடன்

11. ஒரு நல்ல தாயாரின் மகளையே மனைவியாக ஏற்றுக் கொள். - தாமஸ் புல்லர்

12. மனைவி கணவனின் கொத்தடிமை அல்ல, அவனுடைய இன்பங்களிலும், துன்பங்க ளிலும் சமமாகப் பங்கு கொள்ளும் துணைவி, உதவியாளர், பங்காளி. கணவனைப் போல அவளுக்கும் தன் பாதையைத் தேர்ந் தெடுத்துக் கொள்ள சுதந்திரம் உண்டு.



- மகாத்மா காந்தி

## பெண்

08. தன்னைப்பற்றிக் கவலைப்படாமல் ஏழைகளையும் துர் அதிர்ஷ்டம் பிடித்தவர் களையும் பற்றி அதிகமாக நினைக்கிறவளே கருணையுள்ள சகோதரி. - காந்திஜி -

09. நீ எது சொன்னாலும் அவள் சிரிக்கிறாளே ஏன்? அவளது பற்கள் அழகாக இருப்பதால் தான். - பிராங்கிளின் -

10. கொள்ளைக்காரன் பணத்தையோ அல்லது உயிரையோ கேட்பான். ஆனால் பெண்ணோ இரண்டையும் கேட்பாள். - புரோகாம் -

11. அழகான பெண் மகிழ்ச்சி அடைந்தால் பணப்பை கண்ணீர்விடும்.

- ஆங்கிலப் பழமொழி -

12. நூறு பேர் சேர்ந்து ஒரு முகாம் அமைக் கலாம். ஆனால் ஒரு இல்லத்தை அமைக்க ஒரு பெண் வேண்டும். - சீனப் பழமொழி -

13. ஒரு ஆணின் ஆறுதல் ஒரு பெண். அவளே இல்லாவிட்டால் அவனுக்கு எந்த ஆறுதலும் தேவையில்லை. - அலெக்ஸாண்டர் டுமாஸ் -

14. உலகம் பத்து அளவெண் பேச்சைப் பெற்றது. அதில் பெண்கள் ஒன்பதை எடுத்துக் கொண்டார்கள். ஆணுக்கு ஒன்றுதான்.

- பாபிலோனியன் பால்டுத் -

15. பெண்கள் குழந்தைகளைப் போல வேண்டாம் என்று சொல்வதில் மகிழ்ச்சி அடை வார்கள். பெரும்பாலான ஆண்கள் முட்டாள்களைப் போல அதை உண்மையென்று எடுத்துக்கொள்கின்றார்கள்.




- எம் மாக் லால்விக் -

INDIAN RED CROSS SOCIETY A.P. STATE BRANCH

# மருத்துவம்

## மூலிகை வைத்தியம்



**1. கண் சிவப்பு**

நந்தியாவட்டைப் பூக்களை எடுத்து சாற்றைப் பிழிந்து கண்களில் போட கண் பளிச்சென்று குணமடையும். மாம்பழம், எலுமிச்சம்பழம், பப்பாளிப்பழம், அகத்தியிலை, கறிவேப்பிலை, வெந்தய இலை, முருங்கைக்காய், தக்காளிப்பழம், பாவற்காய், இளநீர் என்பவற்றை உண்டு வந்தால் கண்கோளாறு நீங்கும்.

**2. கண்களில் தூசு விழுந்தால்**

கண்களில் தூசு விழுந்தால் கசக்காமல் ஒரு துளி வெண்ணெய் எடுத்து கண்மீது வைத்துக் கட்டி விடுங்கள். சற்று நேரத்தில் தூசு வெளியேறி கண் பிரகாச மடையும்.




**3. கண்ணீர் வடிதல்**

வெறு வயிற்றில் சில வாதாம் பருப்புக்களை மென்று தின்னக் கண்ணீர் வடிதல் குணமாகும்.

**4. கண்படலம் (கட்ராக்ட்)**

நோயாளியின் கண்களில் சாறுபடும் படி 1 கிலோ வெங்காயத்தை நறுக்க வேண்டும். கண்களிலிருந்து கண்ணீர் கொட்டும் போது கட்ராக் கரையத் தொடங்கும்.




## வைத்திய துணுக்குகள்

❄ வேப்பம் எண்ணெயைத் தேய்த்து தலைமுழுகி வர சன்னி, என்பன பிடரி இசிவு, வாத நோய் தீரும்.

❄ கரிசலாங்கன்னி கீரை-இரத்தக் குறைவால் ஏற்படும் முகம், கை கால், வயிறு வீக்கங்களைப் போக்கும்.

❄ தோல் அரிப்பு குணமாக வசம்பு தூளை சுடுநீரில் ஒரு மணிநேரம் ஊற வைத்து 03 வேளை பருகவும்.

## இதயம் வேகமாகத் துடிக்க சில காரணங்கள்



- ஓய்வில்லா வேலை.
- அதிகமான உடற்பயிற்சி.
- அதிக கவலை.
- பாலியல் பிரச்சினை.
- சிகரட், மது அருந்துதல்.
- அதிக மன அழுத்தம், சோர்வு, கோபம், தூக்கமின்மை.
- அமெனியா பெரிபெரி நோய் தாக்குதல்.
- விட்டமின் குறைவு.
- இரத்தத்தில் குளுக்கோஸ் குறைபாடு.
- "டிவிடக்சின்" மருந்து உட்கொள்ளல்.

\- செந்தூரம் -

## இருமல், இளைப்பு, சோர்வு இது எனது அனுபவம்

நான் 1946 ஆகஸ்ட் 25ம் திகதி பிறந்தேன். அளவெட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையில் கல்வி கற்றேன். மாணவர்களுடன் இணைந்து பெற்றோருக்குத் தெரியாமல் புகை பிடிக்கப் பழகினேன். ஆசிரியர்களிடம் அடி வாங்கினேன். திருந்தவில்லை. பெற்றோரும் என்னைப் பல வகைகளிலே திருத்த முற்பட்டனர். முடியவில்லை.


அனுமதி பெற்ற புகைப்பிடிப்பவனானேன். ஒழிந்து புகைப்பிடித்த நான் இப்போ வீதிகளிலும், சந்தி களிலும், வாகனம் ஓட்டும் போதும் நாகரிகமாகப் புகைப்பிடித்தேன். உழைத்தேன். ஆனால் உழைக்கும் பணத்தில் அரைவாசியை நண்பர்களுடன் புகை பிடிப்பதற்கும், பின் குடிப்பதற்குமாகச் செலவழித்தேன். திருமணம் செய்தேன். மனைவியின் அன்புக்காக சில மாதங்கள் மட்டுமே புகைத்தலை விட்டேன். பின் என்னால் விட முடியவில்லை. இன்பமாக இருந்தது. கௌரவமாகவும் இருந்தது.

ஆனால் இன்று இருமல், இளைப்பு, சோர்வு வியாதிகளால் துன்பப்படுகிறேன். 40 வருட உழைப்பில் எனக்குக் கிடைத்த பலன் இதுதான். அன்று புகைத்தேன். வாங்கித் தாராளமாகக் கொடுத்தேன். என்னைச் சுற்றி நண்பர்கள் ஏராளம். ஆனால் இன்று கிளினிக்குக்குக் கொண்டு போகவே யாருமில்லை. மாத்திரைகளோடு அவதிப்படுகிறேன். முதுமையில் இன்பமாக வாழ வேண்டுமானால் இளமையில் நமது உடலை நாமே பாதுகாக்க வேண்டும்.

ந. செல்லத்துரை - அளவெட்டி

குறுங்காவியம்

# அது ஒரு நிலாக்காலம்




( 13 )

ஏன் கண்ணே தயக்கம்?
ஏன் வரவில்லை நேற்று?
முகிலனோ முகிழ்த்து
கேள்விகளைத் தொடுத்தான்.
தனிமையில் நிலா
எதுவுமே பகன்றாளில்லை.
விடைகொடு பெண்ணே
கோபமா என்மேல்?
வேதனைத் தீயில் முனகினான் முகிலன்.
நிலாவின் உதடு துடிக்கவும்
அதியர் வந்தார்; மறைவாய் நின்றார்
இருவரின் பேச்சிலே
செவிதனைக் கொடுத்தார்.



( 14 )

படபடத்தது முகில்
தவிதவித்தது சுழன்று.
வேதனைக் காற்று கலைத்தது முகிலை.
என் தேவதையே ஏன் கலக்கம்?
நிலவிற்கேது பங்கம்?
சொல் மானே - முகில் முனகியது.
பளபளப்பான முத்துப் பல் தெரிய
பவளம் போல் உதடசைய
சொல்லத் தொடங்கினாள் நிலா.



( 15 )

ஓ...... இளைஞனே
என் தோழனே.......
உன்னுறவை நான்
வெறுக்கவிலைக் கேள்;
எம் வயது கற்கும் வயது.
எம் அறிவு கற்கும் அறிவு.
காதலுக்கு இதுவா நேரம்?
துண்டித்துக் கொள்வோம் நம்முறவை
கூறி முடித்தவள்.



சிலையாய் நின்றாள்.
கூந்தலைச் சுருட்டி
சோகமாய் நின்றாள்.

( 16 )

புரிந்து கொண்டான் முகிலன்.
இப்போது இளநகை பூத்தான்.
பெண்ணே..... கவரி மானே....
உன் பதில் இதுவென்றால்
ஏன் கலக்கம் உன்னில்?
அது தெரியும் எனக்கு!
உன் மனதில் நானும்
குடிகொண்டு விட்டேனடி.
பூரித்த அவனும்
மேன்மேலும் இழைந்தான் - குழைந்தான்.
வெண் புறாவே
என் ஆருயிர்ப் பெண்புறாவே சொல்
ஏன் இந்தப் பதில்?
விடை கூறு கண்ணே.



(17)

அன்பனே
வீட்டிலே எனக்கு
வைத்தனர் வேட்டு.
அந்நியன் எவனோ
பத்தினான் கோர்த்து - நான்
கள்ளக் காதலனோடு உலாவாம்
பத்திவைச்சவன் எவனோ நானறியேன்.
ஆனாலும்
இவ்வயதில் இது தேவையில்லையே!
இப்பொழுது அமாவாசை போலும்!
வெளிச்சம் இல்லாமல் நிலா சிலாகித்தது.
பின் மௌனித்தது.
மெல்ல சொல்லத் தொடங்கியது.

அ. சூரியன் ஆனைக்கோட்டை

( நிலா வருவாள்........)

# CASUARINA BEACH



This beach is found in the northern part of Karainagar. This is a beach famous for sea bath. There are a lot of Casuarina trees grown tall and shady. The leaves in the blowing wind make a sound sh… sh… Also, we find a lot of sand hills, where the children play.

This ia a safe place to have a bath. Many tourists come here to have a bath and spend their holidays. They like this place because it is very quiet and sunny. They also bring utensils to cook and eat. Kids like to play in the sea shore. Some of them also pick corals, sea sponge and other small structures, brought by the ocean.


There is an old light house on the western part of this beach. The famous Aiyanar Sivan temple "Elathu Sitthamparm" is close to this beach. Dr. A. Thiagarajah Madhya Maha Vidyalayam is two kilometers away from this beach. December 26th 2004 the giant Tsunami wave hit along the sea shore. Fortunately there were very few damages. We Karainagar inhabitants are very proud of this famous beach.

**S. Thanusiya, 9B, Dr. R. Thiagarajah M.M.V**

## BE A LEADER NOT A BOSS

The Boss drives his Men;
The leader inspires them.
The Boss depends on authority;
The leader on goodwill.
The Boss evokes fear;
The leader radites love.
The Boss says "I";
The leader says "We".
The Boss shows who is wrong;
The Leader shows what is wrong.
The Boss knows how it is done;
The leader shows how to do it.
The Boss abuses Men;
The leader uses them.
The Boss demands respect;
The leader commands respect.
The Boss makes work drudgery;
The leader makes it fine.





## MAN

If a man speaks too much he is talkative.
If he speaks too little he is reserved.
If he spends too much he is a spendthrift.
If he spends too little he is a miser.
If he advances too much he is wayward.
If he lags behind he is laggard.
If he insists too much he is obstinate.
If he insists too little he is fickle.
If he is accommodating he makes himself cheap.
If he remains stiff he is proud.

## Colours and it's meanings

Blue is true; Green is forsaken
Yellow is jealous
White is love
Red is brazen
Black is death.




# பெயரின் முதல் எழுத்துக்குள் பொதிந்திருக்கும் குண நலன்கள்

**S** இரண்டு தலைப் பாம்பாகும் இது. நேர்மாறான (சிவப்புக்கு) பச்சை வர்ண ஒளி உள்ளது. முக்கிய குணம் தீவிரமான அபிப்பிராயங்களை உண்டாக்கும். புகழ்வர், இல்லையேல் இகழ்வர். மிக உற்சாகமூட்டிப் பேசுவர், இல்லாவிட்டால் மிகவும் வருந்தும்படி கூரிய அம்பு போன்ற வார்த்தைகளை உபயோகிப்பர். சமாதானம் செய்து வைப்பர், அல்லது சண்டை மூட்டி விடுவர். கீழ்த்தரமான மனிதரானால் எல்லோரையும் வருத்துவர், மேலானவரானால் எல்லோருடைய துயரையும் தீர்ப்பர். இரு குணங்களும் கலந்தே நிற்கும். இது பிறர் துயர் தீர்க்கும் வைத்தியம் போன்ற தொழில்களுக்கு நல்லது.

**T** இதுவே நான்கு எண்ணிக்கை எழுத்துக்களில் மிக்க பலமானது. இதன் சப்தம் ட, ட என்று வருவதாகவும், சூக்ஷ்மமாகவே கேட்க முடியுமென்றும், வராகி முதலிய யுத்த தேவதைகளின் சப்தமாகவும் கூறப்படுகிறது. இதன் சப்த அலை நீளம் 400. (மனிதர்களின் காதுகளுக்கு 300 வரை நீளமுள்ள அலை ஒலிகளே கேட்கும். ரோஜா முதலிய மலர்கள் மொட்டவிழ்த்து மலரும் போது நான்கு பீரங்கிகள் வெடிப்பதால் ஏற்படும் சப்தம் ஏற்படுகிறதாம். ஆராய்ச்சிக் கருவிகளில் தான் இந்த சப்தம் பதிகிறதே ஒழிய மனிதர்கள் காதில் விழுவதில்லை. ஏனென்றால் நம்முடைய புலன்கள் அளவுக்கு உட்பட்டே இயங்கும்படி பழக்கப்பட்டு விட்டன) இவ்வெழுத்து விடாப் பிடிவாதத்தையும், மாற்ற முடியாத தீர்மானங்களையும் குறிக்கிறது. யோசனை நன்றாகச் சொல்லுவார்கள். தீவிரவாதி. இச்சப்தம் ஆழந்த பச்சை வர்ணத்தை சிவப்பாக்கும்.

## இடங்களும் காரண இடுகுறிப் பெயர்களும்


கட்டைப் பறிச்சான் :- இது திருகோணமலையில் அமைந்துள்ள கடற்கரைக் கிராமம். இங்கு அந்நிய நாட்டினர் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் சந்தனக் கட்டைகள் போன்ற கட்டைகளைக் கப்பலில் கொண்டு வந்து பறிப்பதற்கு இத்துறையைப் பயன்படுத்தினர். அன்று தொடக்கம் இவ்விடம் கட்டைப்பறிச்சான் என அழைக்கப்படுகின்றது.



ஊர்காவற்றுறை :- யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எனப் பல அந்நிய நாட்டவர் ஆட்சி செய்தனர். யாழ்ப்பாணத்தைப் பாதுகாக்க ஊர் காவற்றுறையில் ஒரு கோட்டையைக் கடலுக்குள் கட்டி பாதுகாப்பைப் பலப் படுத்தியிருந்தனர். ஆகவே அவ்விடம் ஊர் காவல் துறை எனப் பெயர் பெற்றது.



குறிகட்டுவான் :- இவ்விடம் தீவுப்பகுதியில் யாழ் மண்ணோடு இணைக்கப்பட்டுள்ள தரைப் பகுதியின் கடைசி இடம். இங்கு நின்று பார்க்கும் போது நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, பருத்தித்தீவு, நயினாதீவு ஆகிய தீவுகளைப் பார்க்க முடியும். அங்கிருந்தே படகுச்சேவை இத்தீவுகளுக்கு நடைபெறுகிறது. ஆகவே இங்கு தென்றல் குறி (திசை) காட்டுவான் என்பது தற்போது மருவி குறிகட்டுவான் எனப்படுகிறது.






## குதிரையும் ஓநாயும்

குதிரை ஒன்று நல்ல மேய்ச்சல் நிலத்தில் மேய்ந்துகொண்டிருந்தது. திடீரென்று ஓநாய் ஒன்று வருவதைப் பார்த்தது. ஆனால் குதிரைக்குத் தப்பி ஓட நேரமில்லை.


சற்றே யோசித்த குதிரை நொண்டுவது போல் நடிக்கத் தொடங்கியது. ஓநாயும் குதிரையிடம் வந்து என்ன குதிரையே! ஏன் நொண்டுகிறாய்? என்றது. குதிரையும் ஐயோ! என் காலில் முள் குத்திவிட்டது என்று கூற, அடடே! எனக்கு நன்றாக முள் எடுக்கத்தெரியுமே என்று கூறிக்கொண்டே ஓநாய் குதிரையின் காலை கவ்வப்போனது.

ஆனால் குதிரையோ ஓநாயை ஒரே உதை உதைத்து விட்டு ஓட்டம் பிடித்தது.

"சிறிதளவு சிந்தனை கூட நன்மை பயக்கும்"

**இ. நிரோஷா, 6A மானிப்பாய் மொ. ஆ. பாட**

## 'நாவு" குறித்த பழமொழிகள்



- உன் நாவைக் காப்பாற்று, உன் சிநேகிதரைக் காப்பாற்றுவாய் - **இந்தியா**
- நாவானது மூன்றங்குல நீளமானது என்றாலும் அறடி மனிதனைக் கொல்லக் கூடியது - **ஜப்பான்**
- பெண்ணின் நாவு அவளுடைய வாள்: அதைத் துருப்பிடிக்கும் படி அவள் அதை விடுவதில்லை - **சீனா**
- யாருடைய இதயம் குறுகியதோ: அவர்களுடைய நாக்கு பெரியது. - **இத்தானி**

**A.S. சிரோமி, 2009 Arts,**
**வேம்படி மகளிர்**

### உங்களுக்குத் தெரியுமா?

❋ பேராசிரியர் சச்சியும் அவரது குழுவினரும் சிக்காகோவில் 375 மில்லியன் ஆண்டுகளுக்குப் முன்னர் வாழ்ந்த மீன்களின் உயிர் சுவடுகளைக் கண்டுபிடித்துள்ளனர். நான்கடி நீளமானதாகக் கருதப்படும் இம் மீன், நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது.

❋ குருதி திரவங்கள் யாவும் இளம் மஞ்சள் நிறமான குருதி திரவவிளைய பாய்மத்தில் மிதந்தவாறு காணப்படும். குருதியில் 55% குருதித்திரவ இழையத்தால் ஆனது. இதில் 92% நீராகும். உடலுக்குத் தேவையான பதார்த்தங்கள் பலவற்றை குருதி திரவ இழையம் கொண்டிருக்கும்.

❋ஒரு பூரண இதயவடிப்பு நான்கு படிமுறைகளின் ஊடாக நடைபெறுகிறது. இந்த நான்கு படிமுறைகளும் ஒருங்கே இதயவட்டம் எனப்படும். இதயத் தசைகளில் ஏற்படும் சுருக்கம், தளர்ச்சி ஆகியன காரணமாக இதயத்தின் அறைகளில் சுருக்கமும், தளர்வும் ஏற்பட்டு குருதிப் பாய்ச்சல் நடைபெறுகிறது.


**செ. விதுர்சன், தரம் 10B**
**யா/ நவாலி மகாவித்தியாலயம்.**

## School [பாடசாலை]



S - Sincerity (உண்மை)
C - Capacity (திறமை)
H - Honesty (நேர்மை)
O - Obedience (மரியாதை)
O - Orderliness (ஒழுக்கம்)
L - Learning (கல்வியறிவு)

இத்தகைய பண்புகளைப் போதிக்கும் இடம் பாடசாலை என்பதாகும்.



தொகுப்பு:-

ம. கார்த்திகா, சுழிபுரம் வி. கல்லூரி,
த. தமிழினி, நவாலி ம. வித்தியாலயம்

Rev. Fr. S. J. Rajanayagam
Director
AHAVOLI
Family Services Centre
St. Patrick's Road, Jaffna, Sri Lanka



# வணக்கமெல்லாம் வணக்கமல்ல

காலில் விழும் கலாசாரம் இன்று மலிந்து, பொலிந்து காணப்படுகின்றது. அரசியல், சமூக, சமய வாழ்வில் அது தொற்று நோயாகிவிட்டது.

அசோகவனத்தில் சீதாபிராட்டி சிறைப் படுத்தப்பட்டுத் துன்பம் அனுபவிக்கின்றாள். இராவணன் நாள்தோறும் அவள் முன்வந்து விழுந்து வணங்கினான் என்று இராவணனின் வணக்கம் பற்றிய காட்சியை வர்ணிக்கின்றார் கவிச்சக்கர வர்த்தி.

பத்துத் தலைகளும் தரையிலே பட்டு எழும்பும் போது நட்சத்திரமண்டலம் விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்தது போலிருந்தது என்று கம்பராமாயணம் கூறுகின்றது. இந்த வணக்கத்தை இராவணன் தினந்தோறும் செய்து வந்தான். இது மரியாதைக்குரிய வணக்கமல்ல. கவர்ச்சியான வணக்கம். காம வேட்கையிலே இருந்து வந்த வணக்கம்.

காலிலே விழுவது பற்றி வள்ளுவம் கூறுகின்றது.

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடி சேராதார்"**

(குறள் 1 : 10)

இறைவன் அடி என்பதை "ஞானியர் அடி" என்று சமணம் பொருள் கொள்கின்றது. விழுந்து வணங்க வேண்டிய இடம் ஞானமுள்ளவரின் திருமுன்னேயொழிய மற்றவர் முன்னல்ல.

இராவணன் சீதாபிராட்டியாரை விழுந்து வணங்கினான். சீதாபிராட்டியார் வணக்கத்துக்குத் தகுதியுள்ளவர். உளவு சாலிலே இருந்து பிறந்தவர். இவள் மண்ணின் மகள். வணக்கத்துக்குத் தகுதியுள்ளவள். வணங்கிய இராவணன் தகுதியுள்ளவன். மணிமுடி மன்னன், சிவ பக்தன். இவன் வணக்கம் குறிதவறிப் போனது. காரணம் இச்சை உணர்வுடன் வணங்கினான். மாற்றான் மனைவியைத் தன்மனைவியாக்கத் தவறான கருத்தியலைத் தன்னுடன் சுமந்து கொண்டே வணங்கினான். இராவணனின் வணக்கம், தன் தகுதியை இழந்து போனது.

கடவுளை வணங்கும் போதும் கூட மாற்றார்க்குரியது, தனக்காக வேண்டும் என்ற இச்சையுணர்வுடன் வணங்கும் வணக்கம் என்றுமே தன் மகிமை துறக்கும்.

**தகுதி இல்லாதவரின் காலில்**
**விழுந்து வணங்கும் வணக்கமும்**
**அசிங்கமானது.**
**தகுதி இல்லா மனத்தோடு**
**வணங்குவதும் அசிங்கமானது.**




என் காலில் விழுந்தால் எல்லாவற்றையும் செய்வேன் என்று இறுமாப்பும், அகந்தையும் உள்ளவர் காலில் விழுவது சீலத்தை உண்டு பண்ணுவதில்லை.

தன் தவறை மறைக்கவும், தகுதியுடன் தான் வாழவும், வாழத்தகுதி அற்றவர் காலில் விழுவதும் வணக்கமல்ல.

**தன் தவறை மறைக்காது தன்னை முழுமையாகவே வெறுமையாக்கி நிறை வாழ்வு தேடி கடவுளின் திருமுன் நிற்பதும், ஞானியரின் பார்வையில் பட்டு நின்று செய்யும் வணக்கமே வணக்கம்.**

(லூக்கா 18 : 10 - 14)


காலில் விழும் கலாசாரம்
கண்டனத்துக்குரியதா?
கௌரவத்துக்குரியதா?
அறிவது விழுபவரின் ஆன்மீகம்
அது பதிலைச் சொல்லும் அவரவர்க்கு.



**ஆ.வே இயேசுதாசன், உடுவில்.**

# கவியருவி

## முன்னேறு



முயற்சி என்ற விதை
உன் மனதில் முளைவிட
முடிவு கட்டிய பின், உன்
சோம்பலைத் தீயிலே
மூட்டைகட்டிப் போட்டுவிடு.
நீ முன்னேற நினைத்தால்
முட்டுக் கட்டையும் – வெறும்
முட்டை ஓடுகளே.
விரைவாய் முன்னேறு.



உறுதியான வெற்றிகள்
உன் உள்ளே இருக்கையில்
சந்தர்ப்பம் வந்தால்
சாதிப்போம் என்று
சட்டம் பேசாமல்
சந்தர்ப்பத்தை நீயே உருவாக்கு.
நீ உன் இருக்கை
நீக்கி மண்ணில்
அடி வைத்து நட.
உன் முயற்சி கண்டு
தடைக்கல்லும் படிக்கல்லாகும்.
அதில் கொஞ்சம்



அறிவுரையும் கேட்டுக்கொள்.
அறிவுரையும் அவசியமே.
ஆரோக்கியமானதை மட்டும்
எடுத்துக்கொள்.
அநாவசியமானதை
தூக்கி சாக்கடையில் போட்டுவிடு.

அ. தமிழொளி, இணுவில், மானிப்பாய்.

## தோல்வி



"காதல் கிரிக்கெட்டில்
நான் பெற்றதெல்லாம்
கண்ணீர் ஓடங்களும்
தோல்வி விக்கெட்டுக்களுமே"

அ. கீத்தா, நவாலி

## என்னவளே



முராரி என உனை ரசித்தேன் – இல்லை
முரண்பாட்டு மூட்டையடி நீ.
முட்களால் எனக்கு
முடி சூட்டி ஏமாற்றத்திற்கே
ஆக்கிவிட்டாய் –முக்கனிகளிலே நீதான்
முதற்கனி என நினைத்திருந்தேன் – இல்லை
முள்ளுடைய இரண்டாங்கனி நானென்று விட்டாயே.



முதல் பூவாய் நான் கண்ட
முழுமதியே வெள்ளையுடை உடுத்திய
முகிலவன் உனை
முழுதாய் என் விழியினில் பட்டிடாமல்
முழுதாய் மறைத்ததுமேனோ?

அ. ஜீவிதா, தரம் – 11

## தாய் அன்பு

ஈரைந்து மாதங்கள் கருவிலே என்னைச் சுமந்தாய்.
ஈன்றெடுத்த பின்னும் காலம் முழுவதும்
கண்விழித்து என்னைக் காத்தாய்.
உதிரத்தை பாலாக்கி என் உடலுக்கு
ஊட்டம் தந்தாய்.



நிலாச் சோறு நீயூட்ட
உன் நிலா முகம் நான் பார்த்து
உணவு உண்டேன்
என், பிஞ்சு விரல் நீ பிடிக்க
உன் தயவில் நடை பயின்றேன்.



பள்ளி பருவம் வந்ததும்
படாத கஸ்ரமெல்லாம்
நீ சுமந்து படிக்க வைத்தாய்.
பரீட்சை நெருங்கையிலே
பசி, தூக்கம் நீ மறுத்து
என்னோடு துணையிருந்தாய் அம்மாவே.
அன்பிற்கும் இலக்கணம் நீயம்மா.
பொறுமையின் சிகரம் நீயம்மா.

றேக்கா . நா, சங்குவேலி

## அன்னையே!



அம்மா! இந்த ஜென்மத்தில் நீ
என்னை மகளாகப் பெற்று – நீ
எனக்குச் செய்த பணிவிடைகள்
அடுத்த ஜென்மத்தில் நான் உன்னை
மகளாக பெற்று நான்
உனக்குப் புரியும் பணிவிடைகளுக்கு ஈடாகுமா?

A. Kajenthini,
J /Hindu Ladies College

### பைசலாபாத் டெஸ்டின் தனிச்சிறப்பு

1978ம் ஆண்டு பைசலாபாத்தில் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக் கிடையே நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் சில ஆட்டக்காரர்கள் குடும்பமாகப் பங்கு பற்றினார்கள். அல்லது அந்த ஆட்டத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். இது ஒரு தனிச் சிறப்பாகும்.

மொகிந்தர் அமர்நாத்துடன் அவரது அண்ணன் சுரிந்தர் அமர்நாத்தும் ஆடியதை அவர்களது தந்தையார் லாலா அமர்நாத் பவிலியனில் இருந்து பார்த்து ரசித்தார். அத்துடன் சுனில் கவஸ்கருடன் அவரது மைத்துனர் குண்டப்பா விஸ்வநாத்தும் இந்திய அணியில் இடம்பெற்றிருந்தார்.

பாகிஸ்தான் அணியிலும் சாதிக் முகம்மதுவும் அவருடைய சகோதரர் முஸ்டக் முகம்மது ஆகிய இருவருமே விளையாடினார்கள். அத்துடன் அவ்வணியில் மஜீத்கானின் இரு உறவினர்களான இம்ரான்கானும், சர்ஃப்ராஸ் நவாசும் பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றிருந்தனர். இன்றுவரை இவ்வளவு உறவினர்கள் இரு அணியிலும் இடம்பெற்று விளையாடிய குடும்ப கிறிக்கெட் டெஸ்ட் போட்டியை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருந்தால் மகுடத்துக்கு இன்றே எழுதுங்கள்.

### ஏறிகணைச் சத்தம் கேட்டுப் படுத்துக் கொண்ட ஆட்டக்காரர்

ஜனவரி 26ம் திகதி இந்தியாவின் குடியரசு தினம். அந்நாளிலேயே அவுஸ்திரேலியாவும் “அவுஸ்திரேலிய தினத்தைக்” கொண்டாடுகின்றது. அவுஸ்திரேலியாவின் “அடி லெயிட்” கிறிக்கெட் மைதானத்துக்கு அருகில் உள்ள “பரேடு” மைதானத்தில் இந்த தினத்தில் பகல் 12 மணிக்கு 21 பீரங்கிகள் முழங்குவது வழமை. இங்கு இங்கிலாந்து - அவுஸ்திரேலியா போட்டி நடைபெற்றது. குண்டுச் சத்தம் கேட்டவுடன் திடீரென்று இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் “ட்ரூமன்” (குறும்புக்குப் பெயர் போனவர்) பயந்தவர் போல் தரையோடு தரையாகப் படுத்து விட்டார். அப்படிப் பார்த்தால் இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் டெஸ்ட் நடந்தால் ஆட்டக்காரர் அடிக்கடி படுக்க வேண்டி ஏற்படும். எழும்பவே முடியாது.

### 1995க்குப் பின் சொந்த மண்ணில் நடந்த டெஸ்டில் அணிகளின் செயற்பாடு

| இல | அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | சராசரி |
|---|---|---|---|---|---|---|
| 1 | அவுஸ்திரேலியா | 80 | 59 | 08 | 13 | 50.08 |
| 2 | இலங்கை | 60 | 32 | 11 | 17 | 46.71 |
| 3 | இந்தியா | 54 | 23 | 11 | 20 | 41.97 |
| 4 | பாக்கிஸ்தான் | 49 | 20 | 14 | 15 | 41.80 |
| 5 | தென்ஆபிரிக்கா | 74 | 45 | 14 | 15 | 38.78 |
| 6 | இங்கிலாந்து | 84 | 39 | 23 | 22 | 38.45 |
| 7 | மே.இ.தீவுகள் | 62 | 19 | 19 | 24 | 37.29 |
| 8 | நியூசிலாந்து | 55 | 21 | 18 | 16 | 34.25 |




தொகுப்பு :- ஏயெஸ்ரி

தொடரும் ………

சென்ற இதழின் தொடர்ச்சி

சிறுகதை

# காலம் வந்தது!

(மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் 'உபகுப்தா" (Upaguptha) என்ற ஆங்கிலக் கவிதையின் கருவை அடித்தளமாக வைத்து எழுதப்பட்டது)

அந்த வீதியின் ஓரத்தே ஒரு பெரிய மாளிகை வருகிறது. அம்மாளிகையில் நிகழ்ந்த திருமண நிகழ்வையொட்டி விருந்துபசாரமும், கேளிக்கை நிகழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வீதியிலுள்ள வாசலில் ஏழைகளுக்கு உணவு வழங்கப்படுகிறது. உணவைப் பெறுவதற்கு ஒருவரையொருவர் நெருக்கியடித்துக் கொண்டு செல்ல எத்தனிப்பவர்களை ஒருவன் கீழ்த்தரமான சொற் களால் உறுக்கி கையில் வைத்திருக்கும் கனத்த தடியால் தள்ளியும், அடித்தும் கொண்டிருந்தான்.

உணவைப் பெறுவதற்கு எழுந்து செல்ல இயலாத அங்கவீனர்களும், நோயாளிகளும் இருந்த இடத்தில் இருந்தவாறே அங்கலாய்ப்புடன் சாப்பாட்டைக் கேட்டு பலமாகக் கத்திக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் குரலுக்குப் பயன் கிட்டாமையால் சிலர் அழுகிறார்கள்.

அந்தக் கும்பலுக்குச் சிறிது அண்மையில் ஒரு பெரிய மரத்தின் அடியில் ஒளியில்லாத மெல்லிய இருளிலிருந்து "தண்ணீர், தண்ணீர்" என்று முனகும் ஒலி கேட்கிறது.

அவ்விடத்திற்கு எதிரே வந்த உபகுப்தர் குரல் வந்த திசை நோக்கி விரைந்தார்.

ஒரு கரிய உருவம் படுத்துக் கிடந்தவாறு தொடர்ந்து "தண்ணீர்" என்று முனகிறது. உபகுப்தர் பக்கத்தே குந்தியிருந்து அவ்வுருவத்தை தூக்கி நிறுத்தி தன்னுடம்பிலே சாய்த்துக் கொள்கிறார். தொழுநோயால் பீடிக்கப்பட்டு மேனியெல்லாம் புண்படர்ந்த அந்த உருவத்தின் முகம் கோரமாக இருக்கிறது. கண்கள் திறக்க இயலாது வீங்கி மூடிக் கிடக்கின்றன. புண்களிலிருந்து துர்நெடி வீசுகின்றது.

உபகுப்தர் தனது கெண்டியிலுள்ள தண்ணீரை அவ்வுருவத்தின் வாயில் பக்குவமாகப் பருக்கினார். தாகம் தீர்ந்த அவ்வுருவம் பெருமூச்சு விட்டு, "ஐயா நான் உதவி கேட்டு எப்படித்தான் அழுது கத்தினாலும் ஒருவரும் கிட்ட வராது, என் வருத்தம் தொத்திவிடும் என்று ஓடி விடுவார்கள். தாங்கள் யார்? எனக்குக் கிட்ட கூசாது ஏன் வந்தீர்கள்?" என்றது

உபகுப்தர் "நான் வருவதற்கு இப்போது தன் காலம் வந்தது" என்றார். (முற்றும்)

— நவாலியூர் நடேசன் —

# முட்டாள் வேலைக்காரன்

ஒரு வீட்டில் வேலைக்காரன் ஒருவன் இருந்தான். தன் முதலாளியை வணங்கிய அவன் "ஐயா! புத்தூரில் உள்ள என் தங்கையை நான் பார்க்கப் போகிறேன். இரண்டு நாட்களில் திரும்பி விடுவேன். அனுமதி தாருங்கள்" என்று கேட்டான்.

"புத்தூருக்கா செல்கிறாய்? அங்கு நிறைய இலந்தம் பழம் கிடைக்கும். எனக்கு இலந்தம் பழம் என்றால் உயிர். நீ வரும்போது எனக்கு நல்ல சுவையான இலந்தம் பழம் ஒரு கூடை வாங்கி வா. அதற்காக இந்தா! பணம்" என்று பணத்தை அவனிடம் கொடுத்தார் முதலாளி.

புத்தூரை அடைந்த அவன் தன் தங்கையின் வீட்டில் தங்கினான். ஊர் புறப்படும் நாள் வந்தது. அவளிடம் "இங்கு நல்ல சுவையான இலந்தம் பழம் எங்கே கிடைக்கும்?" என்று கேட்டான். அதற்கு அவள், "இங்கு பல இடங்களில் இலந்தம் பழம் கிடைக்கும். நீதான் பார்த்து வாங்க வேண்டும்" என்றாள். இலந்தம் பழம் வாங்குவதற்காகத் தோப்பிற்குச் சென்றான் அவன். அங்கே நிறைய பழங்கள் கொட்டி வைக்கப்பட்டு இருந்தன.

"இந்தப் பழங்கள் நல்ல சுவையாக இருக்குமா? சுவையான பழங்கள் மட்டும் ஒரு கூடை வாங்கிக் கொள்கிறேன்" என்றான் அவன்.



"இங்குள்ள பழங்கள் எல்லாமே இனிப்பான பழங்கள் தான்" என்றான் தோப்புக்காரன்.

தான் ஏமாறக் கூடாது என்று நினைத்த அவன் ஒவ்வொரு பழமாக எடுத்துச் சிறிது கடித்துப் பார்த்தான். சுவையாக இருந்தால் அதைக் கூடையில் போட்டான். சுவை இல்லாத பழங்களைத் தூக்கி எறிந்தான். இப்படியே ஒரு கூடை பழம் சேர்ந்தது.

தோப்புக்காரனிடம் பணம் கொடுத்துவிட்டுக் கூடையைத் தூக்கிக் கொண்டான். மகிழ்ச்சியுடன் முதலாளியிடம் வந்தான்.

"ஐயா உங்களுக்கு ஒரு கூடை பழம் வாங்க எனக்கு ஒரு நாள் ஆயிற்று, இதில் உள்ள பழங்கள் அனைத்தும் சுவையான பழங்கள். நானே ஒவ்வொன்றாகக் கடித்துப் பார்த்துத் தேர்ந்து எடுத்தேன். எப்படி என் திறமை" என்று சொல்லிக் கொண்டே கூடையை இறக்கி வைத்தான்.

ஆர்வத்துடன் கூடையைப் பார்த்த முதலாளி திடுக்கிட்டார். எல்லாப் பழங்களும் பாதி கடிக்கப்பட்ட எச்சில் பழங்களாக இருந்தன.

கோபம் கொண்ட அவர் "நீ முட்டாள் என்பதை அறியாமல் போய் விட்டேனே. இனி உனக்கு இங்கு வேலை இல்லை" என்று சொல்லி அவனை விரட்டினார்.

## சிரிக்க சிந்திக்க

ராமு :- ஞானத்தை அடைவதற்கு என்ன பண்ணலாம்?



சோமு :- ஞானத்தின்ரை புருசனைப் போட்டுத் தள்ளவேண்டியது தான்.



மன்னா - மன்னார்

ரீச்சர் :- ஏன்டா நீ திருக்குறளைப் பாடமாக்கிக் கொண்டு வரவில்லை.

மாணவன் :- அப்பதானே ரீச்சர் நீங்க என்ர சொக்கில கிள்ளுவீங்க.

ரஜீவன் - உடுவில்

### Sms Jokes

I like 3 Things.
I. 'Sun' 2. 'Moon' 3. 'You'
Sun for Sun light
Moon for moon light
You for Tube light.



## நகைச்சுவை விருந்து

சுதா : நீ தினம் இரவு எத்தனை மணிவரை படிப்பாய்?

சுமதி : தூக்கம் வரும் வரைக்கும்.

சுதா : தூக்கம் எப்ப வரும்?

சுமதி : புத்தகத்தைக் கையில் எடுத்ததும்.



மன்னா - மன்னார்

ஒருவர் :- ஒரே வீட்டில பத்துத் தடவைக்கு மேல திருடியிருக்கிறாயே. ஏன்?

திருடன் :- நான் அவங்கட ஃபமிலி திருடன்.

ஒருவர் :- டாக்டர் இப்ப லேட்டஸ்ரா என்ன வியாதி வந்திருக்கு.

டாக்டர் :- "ஏன்"

ஒருவர் :- எல்லா வியாதியையும் சொல்லி ஆபீஸில லீவு போட்டுட்டன்.



## கவலையைப் போக்கும் வழி

திருமணமான கணவனும், மனைவியும் வீதியால் சென்று கொண்டிருந்தனர். எதிர்பாராத விதமாக விபத்தில் சிக்கிக்கொண்டனர். கணவன் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். கவலை தாங்க முடியாத மனைவி கணவனுடைய இரத்தக் கறை படிந்த மேற்சட்டையை எப்போதும் தன்னுடன் வைத்து அழுதுகொண்டேயிருப்பாள். இதை அவதானித்த தந்தையார், அவள் கவலையைப் போக்க ஒரு ஜோதிடரிடம் சென்று ஆலோசனை கேட்டார். ஜோதிடரும் அந்த மேற்சட்டையை எடுத்து அந்தக் கறையை நீக்கிவிட்டால் அவள் கவலை நீங்கிவிடும் என்று சொன்னார்.

இரவு 11.30 மணி அவள் நித்திரையானதும் தந்தையார் மெதுவாக சட்டையை எடுத்தார். மெதுவாக அதை வெளியே கொண்டு சென்றார். கிணற்றடியில் வைத்துத் துவைக்கத் தொடங்கினார். கறை நீங்குவதாக இல்லை. சுழல் காற்றும் அடித்துக் கொண்டிருந்தது. காற்றின் மத்தியில் ஒரு அசரீரி; "கறையை நீக்க சேவ்எக்ஸல் பாவியுங்கள்" உடனே சேவ்எக்ஸல் போட்டு தோய்க்கத் தொடங்கினார்.

ஒருவர் :- ஒருவனுடைய கால் எவ்வளவு நீளமாக இருக்க வேண்டும்?



லிங்கன் :- தரையினைத் தொடுமளவுக்கு இருக்க வேண்டும்.



நோயாளி :- தினமும் நீங்க ஒரு பச்சை முட்டை சாப்பிடச் சொல்லுறீங்க. ஆனா என்னால அது முடியாது டாக்டர்.



டாக்டர் :- ஏன்

நோயாளி :- எங்க கோழி வெள்ளை முட்டை தான் போடுது.






**அட்டைப்பட விளக்கம்**

# பழங்குடி மக்கள் நம் நாட்டின் சொத்துக்கள்



காடுகளில் வாழ்ந்த மனிதன் நாகரிக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு வாழத் தொடங்கிப் பல காலங்கள் கடந்து விட்டன. ஆனால் காடுகளில் வாழ்ந்து, தமது வாழ்க்கையைக் காட்டு வாழ்க்கைக்கு பழக்கிக் கொண்ட மக்கட் கூட்டத்தினர் இன்னும் இலங்கையில் வாழ்கின்றனர். அவர்கள் வேடர்கள் எனப்படு கின்றனர். இலங்கையைத் தாயகமாகக் கொண்டு, பண்டைய பாரம்பரிய பழக்க வழக்கங்களுடன் வாழும் மக்கட் கூட்டத்தினரென இவர்களைக் குறிப்பிடலாம். வேடர்களை "ஆதிக் குடிகள்" என்றும் குறிப்பிடுகின்றனர். அவுஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும் இன்றும் இப்படிப்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இவர்களை முறையே "அபோறிஜின்ஸ்" என்றும், "பழங்குடி மக்கள்" என்றும் அழைக்கின்றனர்.



## வேடர்கள் வாழும் பிரதேசங்கள்

வேடர்கள் 'புலிந்தர்', 'சபா' போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். "சபா" என்பது வேட்டையாடுவோர் என்ற அர்த்தத்தைக் கொண்டது. குவேனியின் இரு புதல்வர்கள் விஜயனுக்குப் பயந்து சிவனொளிபாத மலைக்கருகிலுள்ள காடுகளிலேயே ஒளித்து வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. வேடுவ இனத்தவர்கள் இப்பகுதிகளில் தொடர்ந்து வாழ்ந்து வந்தமையாலேயே இப்பிரதேசம் "சப்ரகமுவ" எனக் குறிப்பிடப்படுகின்றது. மேலும் வேடுவ இனத்தவர்கள் சிங்கராஜ காட்டுப் பிரதேசங்களிலும் வாழ்ந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கலவானப் பிரதேசத்திலுள்ள ஒரு கிராமம் "வெத்தகல" (வேடுவன் குன்று) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பை அண்மித்த காயாங்கேணி எனும் இடத்திற்கருகிலுள்ள "இறால்ஓடை" எனும் கிராமத்தில் இன்றும் வேடரின் மூன்றாம் சந்ததியாரைக் காணலாம். இன்று பதுளைப் பிரதேசத்திலேயே வேடர்களை நாம் காணலாம். முக்கியமாக மொனராகல மாவட்டத்திலுள்ள காட்டுப் பகுதியிலேயே இவர்கள் அதிகமாக வாழ்கின்றனர்.



## வழிபாடுகளும் நம்பிக்கைகளும்

பேய், பிசாசுகளை வணங்குதல் வேடர்களின் பிரதான வழிபாட்டு முறையாக உள்ளது. தமது உறவினர்கள் இறந்த பின்பு பேய்களாக மாறுவதாகவும், அவர்களே செல்வத்தையும், துன்பத்தையும் தருபவர்கள் எனவும் நம்புகின்றனர். இதனால் உறவினர்களான பேய்களை மகிழ்வூட்டுவதற்காக "கிரிகொரஹா ஆடுதல்" போன்ற பல சடங்கு சம்பிரதாயங்களை நடாத்துகின்றனர். இங்கு நீண்ட தூரப்புனிதப் பயணங்களை மேற்கொண்டிருக்கும் கரன்டு யகா, மங்கர யகா, ரேரங்கல யகா, கந்தே யகா போன்றவர்களுக்கு அதிகமான சாஸ்திர சடங்குகளைச் செய்கின்றனர்.


இதனை விட "திவெஸ் தெவியோ" என்ற தெய்வத்தையும் வழிபடுகின்றனர். இன்றும் சிறந்த உறவினர்களான பேய்களை வழிபடுதல் முக்கியமான வழிபாடாக உள்ளது. மேலும் சூழலில் உள்ள மரங்கள், கற்கள், குன்றுகள் என்பவற்றில் பேய்கள்,

தெய்வங்கள் குடியிருக்கின்றன என நம்பிக்கை வைத்து அவற்றிற்குப் பூஜைகளைச் செய்து வழிபடுவதை இன்றும் காணலாம்.

## வேடுவச் சமூகத்தின் இன்றைய நிலை

இன்று வேடுவச் சமூகம் பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. அன்றிருந்த வேடர்கள் அம்பு, வில் என்பவற்றைப் பயன்படுத்தி மிருகங்களை வேட்டையாடிக் கொன்றனர். ஆனால் இன்று மிருகங்களை வேட்டையாடத் துப்பாக்கிகளைப் பயன்படுத்துகின்றனர். சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த அவர்கள் இன்று வயல்களில் உழுது விவசாயம் செய்கின்றனர். மேலும் மரங்களின் இலை, குழை, குச்சி, பட்டைகள், தடிகள் என்பவற்றின் மூலம் வீடுகளைச் செய்து அதில் குடியிருந்தவர்கள் இன்று கூரை போடப்பட்ட, களிமண் ஓட்டு வீடுகளைக் கட்டுவதில் ஈடுபடுகின்றதைக் காணக்கூடியதாக உள்ளது. இன்று சமூகத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகக் காடுகளின் சில பகுதிகளில் வேடுவர்களுக்குத் தடை உத்தரவு கொடுக்க வேண்டிய நிலையுள்ளது. இதனால் காடுகளைத் தமது இருப்பிடங்களாகக் கொண்டு வாழ்ந்த அவர்களின் வாழ்க்கை முறை மாற்றமடைந்து வருகின்றது. இதனால் வேடுவர்களும் எமது நாட்டுச் சமூகத்தின் ஒரு பகுதியினர் என நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

## மந்திரம் தொடர்பான நம்பிக்கைகள்



மந்திரம் ஒன்றை உச்சரித்துக் கூறுவதன் மூலம் நோய் நொடிகளிலிருந்து விடுதலை கிடைப்பதுடன், மிருகங்களால் நேரிடும் ஆபத்துக் களிலிருந்தும் தப்பிக்கொள்ளலாம் என அவர்கள் நம்புகின்றனர். இதனால் அவர்களின் அன்றாட வாழ்வில் மந்திரம் என்பது ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

வேடுவச் சமூகத்தில் "ஊனபான, தலா, மொரான ஊரு, பண்டாரிகே" போன்ற கோத்திரங்கள் காணப்படுகின்றன. பன்றிக் கூட்டத்தில் குழந்தையொன்றைப் பெற் றெடுத்த ஒரு தாயினுடைய பிள்ளையின் வழித்தோன்றல்களை "ஊஏருவரிகய" என்ற பெயரால் அழைக்கின்றனர். அரசனுக்கு நீரை வழங்கிய இனத்தவர்களை "ஊனபான வரிகய" என்று அழைக்கின்றனர். இன்று நம் மத்தியில் "ஊனபான, தலா, ஊரு" இனங்கள் மட்டுமே இருக்கின்றன. வேடுவச் சமூகத்தின் நிர்வாகத்தை நோக்கும் போது ஒரு தலைவனைத் தெரிவு செய்யும் போது சம்பிரதாயமாக உள்ள வழியைப் பின்பற்றிச் (தந்தையிடமிருந்து மகனுக்கு) செல்வதில்லை. அதாவது தந்தையிடமிருந்து மகனுக்குச் செல்வதில்லை. அதற்கு மாறாகத் தலைவனால் தெரிவு செய்யப்பட்ட ஒருவனுக்கே பதவி கொடுக்கப்பட்டுகின்றது

பண்டைய காலத்தில் காணப்பட்ட சமூகத்தில் "கமறால்" என்று அழைக்கப்படும் விவசாயி முக்கிய இடத்தைப் பெறுகின்றார். "கமறால்" என்ற ஒருவர் வேடுவச் சமூகத்தில் இருக்குமித்து அவர் வேடுவச் சமூகத்திற்கும் கிராமத்திற்குமிடையில் ஒரு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த துணைபுரிகிறார்.

நன்றி : விஜய்

# நமஸ்காரம் செய்யும் முறை

வஜ்ராசனத்தில் நிமிர்ந்து உட்காரவும். இடது கை மணிக்கட்டை வலது கையால் பின்புறமாக (புட்டப் பகுதியில்) பிடித்து மூச்சை முழுவதுமாக இழுக்கவும். பின்னர் மூச்சை வெளிவிட்டவாறு கண்களை மூடியபடி நெற்றியை நிலத்தில் பொருத்தி சிறிதுநேரம் சுவாசிக்கவும். பின்னர் மூச்சை இழுத்தவாறு நிமிர்ந்து பழைய நிலைக்கு வந்து இரு கைகளையும் முகத்துக்கு முன்பாக வைத்து கண்களைத் திறந்து உள்ளங்கையைப் பார்த்து ஆழ்ந்த சுவாசத்துடன் பிரார்த்திக்கவும்.

குறிப்பு :- கீழே மூச்சை வெளிவிட்டவாறு குனியும் போது "ஓ" என்ற ஒலியை மனதில் இருத்தியவாறும் மூச்சை இழுத்தவாறும் நிமிரும் போது "ம்" என்ற ஒலியை மனதில் இருத்தியவாறும் செய்தல் வேண்டும்.

---

# உடலைத் தளர்த்தும் பயிற்சிகள் (Loosening exercise)

யோகாசன பாடத்திட்டத்தின் படி பல Loosening exercise இருக்கின்ற போதும் இங்கு முக்கியமாக சில பயிற்சிகளைத் தருகின்றோம். அவற்றை ஓர் யோகா போதனாசிரியரின் வழித்துணையுடன் தான் செய்யவேண்டும்.

குறிப்பு :- உடலைத் தளர்த்தும் பயிற்சிகளைச் செய்யாமல் ஒருபோதும் ஹடயோகப் பயிற்சிகளைச் செய்யலாகாது. ஒவ்வொரு பயிற்சிக்கும் மாற்றுப் பயிற்சியுண்டு.

தியானம்



1) நின்று கொண்டு ஓடுதல் (Joking exercise)
   1. முன்பாக ஓடுதல் (Front side)
   2. பின்பக்கம் ஓடுதல் (Back side)
   3. பக்கவாட்டில் ஓடுதல்
2) யோக்கிங் (Joking) செய்தவுடன் முக்ததவுத்தி செய்ய வேண்டும். மூக்கினால் சுவாசத்தை இழுத்து நன்றாக வாயினால் வயிற்றின் உதவி கொண்டு காபனீரொட்சைட்டை (கழிவு வாயு) வெளியேற்ற வேண்டும்.
3) இடுப்பை சுற்றுதல் வலம் இடமாக இடுப்புப் பகுதியைச் சுற்றவேண்டும். கைகளை தோள்களுக்கு சமாந்தரமாக நீட்டவேண்டும் - Twisting (10 தடவைகள்)
4) முன்பக்கம் இடுப்பை வளைத்து கைகளை உயர்த்தி காதுகளுடன் பொருத்தியவாறு உள்ளங்கைகளால் நிலத்தை தொடல். அப்படியே மூச்சை இழுத்தவாறு பின்பக்கம் வளையவும். மாறி மாறிச் செய்யவும் - Bending (10 தவவைகள்)
5) பின்னர் பக்கவாட்டுக்கு வளைதல் - கைகளை உயர்த்தி காதுடன் சேர்ந்திருக்க வேண்டும் - Side Bending (இடம் வலமாக 10 தடவை)
6) தோள்மூட்டுக்களைச் சுற்றுதல் (வலம் - இடம்) இரு முழங்கைகளையும் மடித்து கைவிரல்களைத் தோள்களில் பொருத்தியவாறு சுற்றுதல்.
7) மணிக்கட்டைச் சுற்றுதல் (வலம் - இடம்) - கைகளை தோள்மட்டத்திற்கு சமாந்தரமாக நீட்டியிருத்தல் வேண்டும். கைவிரல்கள் நன்கு பொத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
8) கைகளைச் சுற்றுதல் (வலம் - இடம்) - கைவிரல்களை மடித்து பொத்தி வைக்க வேண்டும். கைகள் மடியாமல் தோளுக்கு மேல் சுற்றல்.
9) கணுக்களைச் சுற்றுதல் (வலம் - இடம்)
10) கழுத்தைச் சுற்றுதல் (வலம் - இடம்)





# மனிதப் பேரழிவின் ஒரு பகுதி

## அங்கவீனர்கள்

போரானது ஆயிரக்கணக்கில் உயிர்களைப் பலிகொண்டதுடன் அமையாது நூற்றுக்கணக் கானோருடைய அவயங்களையும் இழக்கும்படி செய்தது. உடலில் ஏற்பட்ட அங்கவீனங்கள் அவர்கள் உயிரோடு இருக்கும் வரை அவர்களுக்கு பெரும் பாரமாகவே இருக்கும். அதனால் பாதிக்கப்பட்ட நபருக்கும், அவரைச் சார்ந்து வாழ்கின்றவர்களுக்கும் ஏற்பட்ட தாக்கமும், மனச் சலனங்களும் ஆறுதல் சொல்லி ஆற்றமுடியாது. இவர்களில் பலர் மரணத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டு மனவிரக்தியுடனேயே வாழ்கின்றனர். வடகிழக்கு மாகாணத்திலே யுத்தம் உட்பட பல்வேறு காரணங் களினால் 1987 ஜூலை தொடக்கம் 2005 பெப்ரவரி வரை கைகளையும், கால்களையும் இழந்து ஊனமுற்றவர்களுடைய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| இல | அவயவ இழப்புக்கான காரணம் | கால்களை இழந்தவர்கள் | கைகளை இழந்தவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | குண்டு வெடிப்பு | 212 | 21 | 233 |
| 02 | எறிகணை வெடிப்பு | 437 | 62 | 499 |
| 03 | துப்பாக்கிச் சூடு | 165 | 23 | 188 |
| 04 | கண்ணி வெடிகள் | 1830 | 14 | 1844 |
| 05 | வீதி விபத்துக்கள் | 168 | 23 | 191 |
| 06 | தொழிற்சாலை விபத்துக்கள் | – | 01 | 10 |
| 07 | சலரோக நோய் | 256 | – | 256 |
| 08 | தொழுநோய் | 30 | – | 30 |
| 09 | ஆறாத புண் | 114 | 04 | 118 |
| 10 | உயரத்திலிருந்து விழுதல் | 42 | – | 42 |
| 11 | கத்தி / வாள் வெட்டு | 06 | 11 | 17 |
| 12 | பிறப்பு நிலை | 31 | 21 | 52 |
| 13 | புற்று நோய் | 37 | – | 37 |
| 14 | புயல் | 02 | – | 02 |
| 15 | மிருகங்களின் தாக்குதல் | 04 | – | 32 |
| | ஜனவரி, பெப்ரவரி 2005 | 32 | – | 32 |
| | மொத்தம் | 3375 | 180 | 3555 |





இத்தரவுகள் குறிப்பாக வடகிழக்கு மாகாணத்திலே தங்கள் கை, கால்களை இழந்து ஜெயப்பூர் நிறுவனங்களினூடாக போலிக்கை, கால்கள் பொருத்தப்பட்டவர்களுடைய எண்ணிக்கையைக் குறிக்கின்றது. இவ்வாறான சிகிச்சை அளிக்கப்படாதவர்களும் சமூகத்திலே உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது ஒப்புநோக்கிப் பார்க்க உதவியாக இருக்கும். மேற்படி தரவுகளை மாவட்ட ரீதியில் நோக்குகின்ற போது யுத்தம் அதிகமாக நடைபெற்ற மாவட்டங்களையும், அதன் பாதிப்புக்களோடு வாழும் மக்கள் எந்தெந்த மாவட்டங்களில் உள்ளனர் என்பதையும் கண்டுகொள்ளலாம்.

## வடகிழக்கு தவிர்ந்த மாவட்டங்கள்


இத்தரவுகளிலே வடகிழக்கு மாகாணம் தவிர்ந்த பதுளை, புத்தளம் ஆகிய தமிழ் மக்கள் அதிகம் உள்ள இரு மாவட்டங்களின் பாதிப்புக்கள் ஒப்பு நோக்கிப் பார்ப்பதற்காக தரப்படுகின்றது. இவ்விருமாவட்டங்களிலும் கை, கால் இல்லாதவர்கள் அதே 18 வருடகாலப் பகுதிகளில் மொத்தம் 08 பேர் மட்டுமே ஆகும். இதிலிருந்து போரின் கொடூரம் வடகிழக்கில் எவ்வண்ணமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனைக் கண்டு கொள்ளலாம். மேலும் யாழ்மாவட்டத்தில் மட்டும் இரண்டு கால்களை இழந்த 75 பேரும், இரண்டு கால்களை இழந்த 18 பேரும், இரண்டு கண்களையும் இழந்த 126 பேரும் உள்ளனர் என்பது துயரம் தரும் செய்தியாகும்.

வண. ஏ.எஸ். தேவகுணானந்தன்

## வார்த்தை ஜாலப் போட்டி - இல 03இன் விடைகள்



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜோ | ன் | எ | ஃ | ப் | கெ | ன | டி | மி | சி | எ | கி | ப் | து | இ |
| து | டி | மி | க | னு | எ | உ | மா | ச் | தி | ம | அ | ல் | டி | க் |
| ன் | பி | ஆ | க | இ | டெ | ஈ | வோ | மீ | கா | டே | டு | ரெ | வி | மு |
| லோ | மா | கோ | ர் | ப் | ப | ச் | சே | வ் | உ | ரூ | கை | றா | ளா | ரு |
| பி | பா | கொ | ர | றி | கோ | ப் | து | கி | மி | டோ | று | மொ | டி | பீ |
| பா | ற | ஃ | னா | னா | சீ | நா | ங் | னி | ட | பி | லி | நூ | மி | டு |
| ம | ஔ | ரா | டா | ந | றீ | ஊ | நி | கீ | று | எ | தா | ஓ | ர் | ரீ |
| னீ | ம | கா | த் | மா | கா | ந் | தி | றூ | டீ | ரே | த் | றெ | பு | மோ |
| கௌ | ன | ஏ | னு | கு | பெ | டொ | மூ | ஜ | ரி | கூ | இ | ஒ | டி | பு |
| னு | கெ | பே | டி | மெ | இ | ந் | தி | யா | றே | கே | மே | பூ | ன் | லு |



## வார்த்தை ஜாலப் போட்டி - இல 03இன் முடிவுகள்

உலக அதிசய நாடுகள்

உலக தலைவர்கள்

இப் போட்டிக்கு அனுப்பப்பட்ட 18 பேருடைய விடைகளில் முழுமையற்ற 3 விடைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. சரியான 15 பேருடைய விடைகளில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 2 அதிர்ஷ்டசாலிகள் விபரம் வருமாறு

| 1ம் பரிசாக 200/= பெறும் அதிர்ஷ்டசாலி | 2ம் பரிசாக 150/= பெறும் அதிர்ஷ்டசாலி |
|---|---|
| 1. தேவசேனன் விஜயகுமார் யாழ்ப்பாணம். | 1. S. இலட்சுமிகாந்தன் ஒட்டுமடம். |

## S.M.S பதில் - 8



## இவர் யார்?

**SMS பதில் 7**



இந்திய முன்னாள் திரைப்பட நடிகர் M.G. இராமச்சந்திரன்(M.G.R)

சரியாக விடையனுப்பிய 61 பேரில் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. P. இவாஞ்சலின், மானிப்பாய்
2. S. நிக்ஷாந்தன், மானிப்பாய்.
3. கரோலின் சுஜானி, நவாலி

நீங்கள் MAKUDAM SMS என Type செய்து பதிலையும் Type செய்து உங்கள் பெயர், முகவரியையும் குறிப்பிட்டு 0774651244 எனும் இலக்கத்திற்கு 15.08.2008இற்கு முன்னர் SMS செய்யுங்கள்.

Eg :- (MAKUDAM SMS - 8 (விடை) Your Name, Your Address)
சரியான விடையளித்தோரில் 3 அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா 50/= Reload செய்யப்படும்.

# சந்திரன் பான்சி பலஸின்

இல 05

**போட்டி விதிமுறைகள்**

## குறுக்கெழுத்துப் போட்டி

சரியான விடைகளை கூப்பனிலுள்ள சதுரக் கட்டங்களில் முறைப்படி நிரப்பி 15.08.2008ற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். சரியான விடையை அனுப்பி வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு பெறுமதிமிக்க பரிசில் வழங்கப்படும்.

### இடமிருந்து வலம்

1. வயலின் இசைக்கருவி தோன்றிய இடம்.
5. அமெரிக்காவில் "புஸ்ஸி" என அழைக்கப்படும் மிருகம்.
6. ஒட்டுவதற்குப் பயன்படுத்தப்படுவது
7. அம்பை எய்துவிடப் பயன்படுவது (திரும்பியுள்ளது)
9. வடிவத்தின் ஒத்தசொல்
10. உண்மை (குழம்பியுள்ளது)
12. மடத்தை இப்படியும் கூறலாம். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. பெண்களுக்குக் கட்டாயம் பயிற்சி கொடுக்கும் நாடு.
2. இந்துக்களின் அடையாளப்பூச்சு (திரும்பியுள்ளது)
3. மனிதனைப் போல் உணர்ச்சிவசப்படும் போது கண்ணீர் சிந்தும் விலங்கு
4. முன்னைய காலத்து தபால் பெட்டியின் நிறம்
6. உடை தயாரிக்கப் பயன்படும் தாவரம்.
8. நஞ்சு என்று பொருள்படும்.
9. உறுதி, பலம் எனலாம். (குழம்பியுள்ளது)
11. ஒருவரை வீழ்த்துவதற்காக வகுக்கும் திட்டம் (தலைகீழாகவுள்ளது)


**வடிவமைப்பு : சுபா - உடுவில்**

---

## குறுக்கெழுத்துப் போட்டி - இல 04 இன் முடிவுகள்

இப்போட்டிக்கு 17 பேர் விடைகளை அனுப்பியிருந்தனர். இவர்களில் 10 பேருடைய விடைகள் முழுமையற்ற காரணத்தினால் நிராகரிக்கப்பட்டன. சரியான 07 பேருடைய விடைகளில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் விபரங்கள் ஒழுங்கு முறையில் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன

**சந்திரன் பான்சி பலஸின் ஆதரவில்**



பரிசில் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. தயாளன் ...ஷயா
   சின்னப்பா வீதி, நவாலி
2. ஆ. பராசக்தி
   பெண்கள் இல்லம் பண்டத்தரிப்பு

பாராட்டு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. மு. அலோசியஸ் - உடுவில் மகளிர் கல்லூரி
2. ஏ. கிருக்ஷாந்தி - உடுவில் மகளிர் கல்லூரி
3. ஏ. ஜர்மிளா - உடுவில் மகளிர் கல்லூரி
4. டீ. சயூத்தா - உடுவில் மகளிர் கல்லூரி

### போட்டி 04 ன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பு | த் | 2 த | ர் | | 3 சீ |
| ன் | | சா | | 4 சூ | று |
| 5 க | ல | ப் | 6 ம் | | ம் |
| ல | | 7 த | ல | ம் | |
| 8 ச | ல | ம் | | | 9 மா |
| ம் | | | 10 பா | தி | ரி |

ஓடர் கொடுத்து பெறப்படும் ஐஸ்கிறீம் வகைகள் இலவச வாகன வசதியுடன் குறிப்பிட்ட நேரத்தில் உங்கள் இடத்திற்கு கொண்டு வந்து தரப்படும்.

சுதாஸ் ஐஸ்கிறீம்

Jaffna Road, Manipay.

SUTHAAS ICE CREAM

சுதாஸ் ஸ்பெஷல், ஸ்பெஷல் ஐஸ்கிறீம், நட்ஸ் ஐஸ்கிறீம் போன்ற ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் குளிர்பான வகைகள், சிற்றுண்டி வகைகள் உரிய நேரத்தில் உயர்ந்த தரத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**மகுடம் சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெற வேண்டுமா?**

**கட்டண விபரம்**

| | முழுப்பக்கம் | அரைப்பக்கம் |
|---|---|---|
| பின் அட்டை (கலர்) | - 6000/= | 5000/= |
| பின் அட்டை | - 2000/= | 1000/= |
| உள் பக்கம் | - 1000/= | 500/= |

பிறந்தநாள், திருமணவாழ்த்துக்கள் - 200/=

ASTAN

அஸ்ரன் கல்வி நிலையம்

நவாலி வீதி, ஆனைக்கோட்டை. T.P - 021-2224031

* G.A.Q, 1st in Commerce

வகுப்புக்கள் வெகு தூரத்தில் இல்லை....

தரம் 01 முதல் O/L, A/L வரையான வகுப்புக்கள்

கற்கத்துடிக்கும் மாணவ சமுதாயத்தின் வழிகாட்டி.

அச்சுப்பதிப்பு : றூபன் பிறிண்டேர்ஸ்.

முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. T.P 0776 624386

# குறுக்கெழுத்துப் போட்டி – இல 05

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ந் | 2 | 3 | | 4 |
| | | 5 . | | | ச் |
| | | வி | | 6 | |
| 7 ல் | 8 | | 9 | ரு | |
| | 10 | 11 | ம் | | |
| 12 | | | | தி | |

**குறிப்பு :-**

மகுடம் சஞ்சிகையின் குறுக்கெழுத்துப் போட்டி பகுதியிலுள்ள வழிகாட்டல்களை கவனித்து மேற்படி கட்டங்களை தெளிவாக பூர்த்தி செய்து "மகுடம் சஞ்சிகை", நவாலி வை. எம். சி. ஏ, நவாலி, மானிப்பாய். என்னும் முகவரிக்கு 15.08.2008றகு முன்பாக அனுப்பி வையுங்கள்

**முழுப்பெயர்** :- ..............................................................................

**தபால் முகவரி** :- ..............................................................................

**கையொப்பம்** :- ..............................................................................

---

# வார்த்தை ஜாலப் போட்டி – இல 04

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | போ | நே | பா | ள | ம் | மே | கா | வ | எ | ச | ர | ப | லா | க |
| மை | ஆ | அ | ல | மா | து | கே | டு | ங் | நீ | சா | இ | து | ஏ | ரா |
| நா | ப் | ந | பூ | ட் | டா | ன் | துா | கா | ஐ | ஒ | ந் | சி | ஞ | ம |
| தே | கா | தெ | சை | ரோ | ப | ஏ | கி | ள | சொ | க | தி | தி | ள் | லெ |
| மு | னி | பா | க் | கி | ஸ் | தா | ன் | தே | கீ | சீ | யா | மொ | க | நு |
| சே | ஸ் | பொ | ஆ | ட | ஓ | துா | பா | ச | மா | கு | ரி | ஊ | வு | பை |
| லொ | தா | கெ | மெ | லூ | கூ | இ | பி | ம் | சு | சோ | மூ | ஞா | தீ | டு |
| ஞ | ன் | பீ | ஔ | த | மி | சூ | ஃ | மோ | லி | கை | ரீ | பே | லை | தீ |
| தா | மீ | றொ | பு | ஈ | தி | இ | ல | ங் | கை | உ | நூ | லீ | மா | மொ |
| செ | டா | லே | கோ | லு | பூ | லோ | டி | மு | பெ | கொ | ஞி | மூ | டீ | ஞீ |

**குறிப்பு :-**

அருகிலுள்ள எழுத்துக் களுக்குள் நீங்கள் மேலிருந்து கீழாகவோ, கீழிலிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ தேடிக் கண்டு பிடியுங்கள்.

இங்கு 8 சார்க் நாடுகள் மறைந்து காணப்படுகின்றன. அவற்றை பென்சில் வர்ணத்தின் மூலம் அடையாள மிட்டுக் காண்பியுங்கள். உங்கள் விடைகளை "மகுடம் சஞ்சிகை", நவாலி வை.எம். சி.ஏ, நவாலி, மானிப்பாய். என்னும் முகவரிக்கு 15.08.08றகு முன்பாக அனுப்பி வையுங்கள் குறித்து அனுப்புங்கள்.

**முழுப்பெயர்** :- ..............................................................................

**தபால் முகவரி** :- ..............................................................................

**கையொப்பம்** :- ..............................................................................

Rev. Fr. S. J. Rajanayagam
Director
AHAVOLI
Family Services Centre
St. Patrick's Road, Jaffna, Sri Lanka.